Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month



# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 17 Click - 9

DECEMBER 2021 ₹ 1

## மாநில துணைத்தலைவர் பதவிக்கு CVPA சரவணன் போட்டியிடுகிறார்!

## மண்டல செயலாளர் பதவிக்கு வேளச்சேரி பகுதி செயலாளர் திலீப் போட்டியிடுகின்றார்.!

தமிழகம் முழுவதிலும் உள்ள போட்டோ வீடியோ சங்கங்களின் கூட்டமைப்பாக, தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேஷன் (TVPA) அமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் இஙகஅ உட்பட மொத்தம் 32 மாவட்ட சங்கங்கள் அங்கம் வகித்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை 30 பேர் இங்கு பொதுக்குழு உறுப்பினர் களாக அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இங்கு தேர்தல் நடைபெறுகிறது. அந்த வகையில் இந்த அமைப்பிற்கு CVPA வில் இருந்து தலைவர்,பொதுச்செயலாளர், துணைத் தலைவர், அமைப்பாளர், இணைச்செயலாளர், மண்டல செயலாளர், போன்ற முக்கிய பதவிகளில் ஏற்கனவே அங்கம் வகித்து வந்துள்ளனர். மாநில சங்க தேர்தல் இதுவரை கொரோனா காலத்தால் தள்ளிப் போடப்பட்டு வந்தது. தற்போது நிலைமை ஓரளவு சீராக உள்ளதால் மாநில சங்க தேர்தல் இம்மாதம் வேலூரில் நடைபெறுகிறது. CVPA சார்பாக மாநில சங்க தேர்தலில் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிட, நமது மாவட்ட சங்க காலத்தில் தலைவர் சரவணன் அவர்களுக்கும், மண்டலச் செயலாளர் பதவிக்கு போட்டியிட வேளச்சேரி செயற்குழு உறுப்பினர் திலீப் அவர்களுக்கும், அனுமதி அளித்து இஙகஅ செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ்விருவரும் வேலூரில் நடைபெறும் மாநில சங்க தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இவ்விருவரும் இதற்கான வேட்புமனுவை மாநில சங்க தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர். வேலூரில் நடைபெற்றவுள்ள தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இவ்விருவரும் வெற்றி வாகை சூடிட CVPA வாழ்த்தி வழி அனுப்பி வைக்கிறது.



மாநில சங்க தேர்தலில் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிட நமது சங்க தலைவர் **சரவணன்** வேலூரில் வேட்புமனு தாக்கல் செய்தார்.




TVPA மாநில தேர்தலில் மண்டல செயலாளர் பதவிக்கு போட்டியிடும் **திரு.திலீப்** அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார்..



மாநில சங்க தேர்தலில் போட்டியிட CVPA செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான அனுமதி கடிதத்தை நமது சங்க தலைவர் சரவணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்



# இரங்கல் தீர்மானம்

CVPA வில் மந்தைவெளி பகுதி செயலாளராக இருந்து சிறப்பாக செயல்பட்டு வந்த காலஞ்சென்ற தெய்வத்திரு .வேலு அவர்களின் மறைவுக்கு இஙகஅ செயற்குழுவில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் வேலு அவர்களின் திருவுருவப் படத்தை செயற்குழுக் கூட்டத்தில் திறந்து வைத்து நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சார்பில் மறைந்த வேலுவிற்கு அனைவரும் புகழ் அஞ்சலியும் செலுத்தினார்கள்.

முன்னதாக நமது சங்கம் சார்பில் வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ₹20, 000 ரூபாய் அவரது வாரிசுதாரர்களிடம் சங்க நிர்வாகிகள் மூலமாக வழங்கப்பட்டது.

மேலும் வேலு அவர்களின் குடும்ப சூழ்நிலை மற்றும் குழந்தைகள் எதிர்கால படிப்பை கருத்தில் கொண்டு, சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பெறப்பட்ட ரூபாய் 74,500

பீ. வீ ஸ்டார் நண்பர்கள் சார்பில் பெறப்பட்ட ரூபாய் 60,500



சைதாப்பேட்டை கண்ணன் நண்பர்கள் சார்பில் பெறப்பட்ட ரூபாய் 36,450

ஆக மொத்தம் 1,71,450 ரூபாய் வேலு அவர்கள் குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது.





# ஃபேஸ்புக் நிறுவனம் மெட்டா பிளாட்ஃபார்ம் இங்க்காக மாறியது!




ஃபேஸ்புக் நிறுவனம் தனது பெயரை 'மெட்டா பிளாட் ஃபார்ம் இங்க்' என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. இதை நாம் அவ்வளவு எளிதில் கடந்து சென்றுவிட முடியாது. காரணம், இந்தப் பெயர் மாற்றத்திற்கு பின்னால் பல்வேறு சர்ச்சைகள் இருந்தாலும் , அதன் தற்போதைய செயல்பாடுகள் முரணாக இருந்தாலும், தனது அடுத்த கட்ட நகர்வுகளை , வருங்கால தலைமுறையை நோக்கி பயணித்து, புதிய தொழில்நுட்ப மாற்றங்களை உருவாக்க தயாராகிவிட்டது. மெட்டாவர்ஸ் என்ற சொல்லுக்குப் பின்னால் , (மெட்டா என்றால் அப்பால் என்றும், வர்ஸ் என்றால் பிரபஞ்சம் என்றும்) கற்பனையை காட்சிப்படுத்த தொழில்நுட்பத்துறையில் பயன்படுத்தப்படும், பிரபஞ்சத்துக்கு அப்பால் எனும் ஒரு வலுவான வார்த்தை அடங்கியுள்ளது.

ஃபேஸ்புக் நிறுவனம் வெறும் பெயர் மாற்றத்தோடு இருந்துவிடாமல், வருங்காலத்தில் மக்கள் பெருமளவில் பயன்படுத்தப் போகும் நவீன தொழில்நுட்ப மாற்றத்தின் மீது நம்பிக்கை வைத்து மெட்டாவர்ஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதை உருவாக்குவதற்கு ஃபேஸ்புக் நிறுவனம் நீண்டகால திட்டங்களுக்கு ஒரு பில்லியன் டாலர் வரை திரட்டி இருக்கிறது. பல்வேறு நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வத்துடன் முன்வந்துள்ளன. இது தவிர உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் எல்லாம் மெட்டாவர்ஸ்ஸை பயன்படுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளன. இந்தியாவில் மிகப்பெரிய நிறுவனமாக கருதப்படும் ரிலையன்ஸ் உட்பட பல்வேறு ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மெட்டாவர்ஸ்ஸை நாடத் தொடங்கியுள்ளனர்.

மெட்டாவர்ஸின் வளர்ச்சிக்கு வீ.ஆர் ( வெர்சுவல் ரியாலிட்டி ) தொழில்நுட்பம், ஏ. ஆர் ( அக்மென்டடு ரியாலிட்டி ) தொழில்நுட்பம், எம். ஆர் (மிக்ஸ்டு ரியாலிட்டி) தொழில்நுட்பம், மேலும் சில விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் பிற தொழில்நுட்பங்கள் கலவையை பயன்படுத்தி மெட்டா வர்ஸ் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது இன்று மக்களின் வாழ்க்கையில் அன்றாட ஒரு தேவையாக மாறிப்போன ஸ்மார்ட் போனின் வீடியோ கால் தொழில்நுட்பமும், மேரியோ முதல் பப்ஜி கேம் வரை பயன்படுத்தப்படும் வெர்ச்சுவல் ரியாலிட்டி உணர்வுகளை மட்டும் மெட்டாவர்ஸ் தனக்காக எடுத்துக் கொண்டுள்ளது. இதற்காக இதை ஒரு வீடியோ கேம் என்று யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

மெட்டாவர்ஸ் மூலமாக மீட்டிங்கில் இணையும் ஒருவரோ அல்லது பலரோ, இதற்காக 3டி வடிவத்தில் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பத்துடன் கூடிய கண்ணாடியை அணிந்து கொண்டால், அவர்கள் அனைவரும் ஒரே அறையில் எதிர் எதிராக அமர்ந்து பேசும்படியான உணர்வை மெட்டாவர்ஸ் ஏற்படுத்தும். இதற்காக தற்போது அலுவலக மீட்டிங் தொடர்பான கட்டமைப்பை மெட்டாவர்ஸில் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கென நாற்காலி, மேஜை, சுவரோவியம் கொண்டதாக அந்த ரூம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தொழில் நுட்பத்தின் மூலம் கற்பனையில் நினைத்துப் பார்க்க முடியாத பல மாற்றங்களை நாம் விரைவில் சந்திக்க இருக்கிறோம்.

# டிஜிட்டலில் புகைப்படம் எடுப்பது கலையா அல்லது அறிவியலா?

டிஜிட்டல்-ஃபோட்டோகிராஃபியின் இயல்பு, மற்றும் அதன் உண்மையான தன்மை என்ன , என்ற கேள்வி பல ஆண்டுகளாக கேட்கப்படுகிறது. டிஜிட்டல் புகைப்படம் எடுப்பது உண்மையில் கலையா அல்லது அறிவியலா என்கிற கேள்வி இருவேறு தரப்பினரிடம் அடிக்கடி எழுப்பப்படுகிறது.

கலை - என்பது பலருக்கு உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தனித்திறன் ஆகும். டிஜிட்டலில் புகைப்படம் எடுப்பதை ஒரு கலை வடிவமாக நியாயப்படுத்துகிறோம்.புகைப்படம் எடுத்தல் என்பது ஓவியம் அல்லது வரைதல் கலையின் மற்றொரு பரிமாணமாகும். டிஜிட்டலில் புகைப்படம் எடுத்தல் மற்றும் ஓவியம் ஆகியவற்றுக்கு இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது, ஏனெனில் புகைப்படம் யதார்த்தத்தின் உண்மையான உருவமாக இருக்கும். அதே வேளையில், டிஜிட்டல் எடிட்டிங் மூலம் நாம் விரும்பினால் அதை சரியாக மாற்றியமைக்க முடியும்.

எடிட்டிங் நடைமுறையில் இலாவிட்டாலும், டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல் என்பது ஒரு சிறந்த கலைஞரின் பார்வையில் , டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல் என்பது ஒரு கலை வடிவம் என்று பலர் இன்னும் நினைக்கிறார்கள். ஒரு கலையாக டிஜிட்டல் புகைப்படம் எடுப்பதன் தன்மை, ஒரு கலைஞன் உணர்ச்சிகளையும் செய்திகளையும் காட்சிகள் மூலம் வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அறிவியல் - டிஜிட்டல் புகைப்படத்தின் உண்மை தன்மை என்பது அறிவியல் என்று சிலர் வாதிடுகின்றனர். சிலரது கூற்று என்னவென்றால், புகைப்படம் எடுத்தல், ஓவியம் போல் இல்லாமல், உண்மையில் ஏதோவொன்றில் இருந்து வருகிறது. மற்றும் ஒரு ஓவியரின் மனதில் அல்லது அவர்களின் உணர்ச்சிகளைப் போல உருவாக்கப்படவில்லை. ஒரு புகைப்படக்காரர் புகைப்படத்தை மட்டுமே எடுக்கிறார், அவற்றை உருவாக்கவில்லை என்பதால் இது ஒரு உறுதியான வாதம்.

டிஜிட்டல் புகைப்படக்கலையின் விஞ்ஞானத் தன்மையை ஆதரிக்கும் மற்றொரு வாதம் என்னவென்றால், மக்கள் எடிட்டிங் செய்வதும், புகைப்படக் கலைஞர்கள் செய்யும் மாற்றங்கள் விஞ்ஞானரீதியாக சுருக்கப்படக்கூடிய தொடர்ச்சியான படிநிலைகளிலிருந்தும் ஆகும். டிஜிட்டல் போட்டோகிராஃபியின் அறிவியல் தன்மைக்கு ஆதரவாக விவாதம் செய்பவர்கள் இருக்கலாம். ஒவ்வொரு முறையும் ஒரே மாதிரியான முடிவுகளை அடைவதற்கு ஒரே மாதிரியான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற பகுத்தறிவு பின்னர் உருவாக்கப்பட்டு, டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல் பற்றிய ஒரு நிலையான தன்மையை உருவாக்குகிறது

CVPA NEWS (Tamil & English ) Monthly Newspaper,
RNI No. 15261 /2005 (R.Dis no.1834/04)
Published by B.SRIDAR, on behalf of
Chennai Video & Photographers' Association,
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2.
Ph: 2860 7821 Email : cvpanews2019@gmail.com,
Website : www.cvpa.in
Printed by M.NAVANEETHAN, at Nava Jothi Achagam,
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : B.SRIDAR, Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821

Postal Registration no TN/ARD/11/2021-2023
WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.12.2021

To,